




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 270 24.03.2026 TUESDAY PANGUNI: 10 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 270 24.03.2026 செவ்வாய்கிழமை பங்குனி : 10 விலை : ரூ.5/-


## தமிழகத்தில் தேர்தல் பறக்கும் படை

# "தீவிரசோதனை"

## இதுவரை ரூ.151 கோடி பறிமுதல்

சென்னை: மார்ச்.24-

தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில் தற்போது வரை ரூ.151 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில், ஏப்., 23ம் தேதி சட்டசபை பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. இதனால், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் வந்துள்ளதால், வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதை கட்டுப்படுத்தும் வகையில்,



தேர்தல் கமிஷன் 50,000 ரூபாய்க்கு மேல் கொண்டு செல்லும்போது உரிய ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும் என உத்தரவிட்டது.

இதை கண்காணிக்க, மாவட்டம் முழுவதும் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் நியமிக்கப்பட்டு உள்ளனர். தற்போது வரை தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில் ரூ.151 கோடி மதிப்புள்ள பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறியதாவது: தமிழகம் முழுவதும் ரூ.151 கோடி மதிப்பாலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக சிவிஜில் செயலி மூலம் 794 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

புதிதாக வாக்காளர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 50 சதவீதம் பேருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகளை கணக்கிடும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அர்ச்சனா பட்நாயக் கூறினார்.

## "இனியும் திமுகவின் ஏவல்துறையாக காவல்துறை செயல்படக் கூடாது": நயினார் நாகேந்திரன்

சென்னை: மார்ச்.24-

இனியும் ஏவல் துறையாக இல்லாமல், திருநெல்வேலி விவசாயி கொலை வழக்கில் காவல்துறை உரிய நடவடிக்கை எடுத்து சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டும் என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்: "திருநெல்வேலி மாவட்டம் மூன்றடைப்புப் பகுதியில் பட்டியலின விவசாயி ஆறுமுகம் கொலை செய்யப்பட்டு ஆறு நாட்களாகியும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படாத விரக்தியில் அவரது மகள் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக வெளிவந்துள்ள செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.



கொலை செய்த குற்றவாளிகளைக் கண்டுபிடிக்காமல் காவல்துறை மெத்தனமாகச் செயல்பட்டதால், இன்று மேலும் ஒரு அப்பாவி உயிர் பலியாகியுள்ளது. திறனற்ற திமுக ஆட்சியில் கடந்த ஐந்தாண்டுகளாகக் குற்றங்கள் பெருகிய போதெல்லாம் வேடிக்கை பார்த்த கொடூரம் போதாதென்று, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த பின்பும், வேடிக்கை பார்க்கிறதா தமிழகக் காவல்துறை?

இன்னும் 30 நாட்களில் இருந்த இடம் தெரியாமல் திமுக அரசைத் தமிழக மக்கள் தூக்கியெறியவுள்ள நிலையில், இனியும் ஏவல் துறையாகச் செயல்படாது, தமிழகக் காவல்துறை உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்! சட்டம் ஒழுங்கை உறுதி செய்ய வேண்டும்! " என்று நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

## சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு: 9 காவலர்களும் குற்றவாளிகள் என தீர்ப்பு

மதுரை, மார்ச்.24-

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்த வியாபாரி ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோரை கடந்த 2020ம் ஆண்டில் போலீசார் தாக்கியதில் படுகாயம் அடைந்து அடுத்தடுத்து இறந்தனர். நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த வழக்கு சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 10 போலீசார் கைதாகி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். அதில் பால்துரை என்பவர் 2020 ம் ஆண்டு ஆகஸ்ட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தார்.

இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் செசன்சு கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வந்தது. சம்பவம் நடந்தபோது சாத்தான்குளம் போலீஸ்



நிலையத்தில் பணியாற்றிய பெண் போலீசார் ரேவதி, பியூலா, சப்இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் சாட்சியம் அளித்தனர். மொத்தம் 100க்கும் மேற்பட்ட சாட்சிகள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டனர்.

கிட்டத்தட்ட 6 ஆண்டுகள் இந்த வழக்கு விசாரணை தொடர்ந்து நடந்து வந்தது. கைதானவர்கள் தங்களுக்கு ஜாமீன் கோரி மாவட்ட கோர்ட்டு, ஐகோர்ட்டு, சுப்ரீம் கோர்ட்டுகளில் தாக்கல் செய்த மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இந்த நிலையில் விசாரணை நிறைவடைந்ததை அடுத்து, இந்த வழக்கின் தீர்ப்பை மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் செசன்சு கோர்ட்டு நீதிபதி முத்துக்குமரன் வாசித்தார். அப்போது தந்தை, மகன் இருவருக்கும் மரணத்தை விளைவிக்கும் காயங்கள் உடலில் இருந்துள்ளது. ஜெயராஜ், பென்னிக்ஸ் உடலில் இருந்த காயங்கள் இயற்கைக்கு மாறானது. போலீசாரால்தான் அந்த காயங்கள் ஏற்பட்டது ஊர்ஜிதமாகியுள்ளது.

அடித்து பழக அப்பா, மகன் கிடைத்துள்ளனர் என போலீசார் பேசியுள்ளனர். இரவு முழுவதும் 10 நிமிடம் இடைவெளி விட்டு தாக்கியுள்ளனர். இதன் மூலம் இந்த வழக்கு கொலை தான் என்பதை இந்த நீதிமன்றம் உறுதி செய்கிறது என்று நீதிபதி தெரிவித்தார். மேலும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப் இன்ஸ்பெக்டர்கள் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் உள்பட 9 காவலர்களும் குற்றவாளிகள் என்றும் குற்றவாளிகளுக்கான தண்டனை விவரம் வருகிற 30ந்தேதி அறிவிக்கப்படும் என்றும் நீதிபதி தெரிவித்துள்ளார்.

## பெரம்பூரில் பிரச்சாரம் தொடங்குகிறார் விஜய்

சென்னை: மார்ச்.24-

பெரம்பூரில் தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தை தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

தமிழக சட்டப் பேரவை தேர்தலில் தவெக தனித்து போட்டியிடும் சூழலில் 100 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்வு முடிந்து விட்டதாக கூறப்படுகிறது.

அக்கட்சியின் தலைவர் விஜய் வரும் 25 அல்லது 26ம் தேதிகளில் பெரம்பூரில் நடக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று பிரச்சாரத்தை தொடங்குவதாக தகவல் வெளியாகி உள்ளது.



## "திமுக ஆட்சி தொடர்ந்தால் இமாச்சலப் பிரதேச நிலைதான் தமிழகத்துக்கும் ஏற்படும்": அன்புமணி

சென்னை: மார்ச்.24-

திமுக ஆட்சி நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் இமாச்சலப் பிரதேச அரசு போல் தமிழ்நாட்டிலும் அரசு ஊழியர்களின் மாத ஊதியத்தை 30 % முதல் 50 % வரை குறைக்க வேண்டியிருக்கும் என்று பாமக தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "இமாச்சலப் பிரதேசத்தில் நிலவும் மிகக் கடுமையான நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி, அம்மாநில அரசு ஊழியர்களுக்கு 30 % வரையிலும், முதல்வருக்கும், அமைச்சர்களுக்கும் 30 முதல் 50 % வரையிலும் ஊதியம் தற்காலிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலத்தின் நிதி மேலாண்மை மிக மோசமாக இருந்தால், அந்த மாநிலத்தில் என்னென்ன சீரழிவுகள் ஏற்படும் என்பதற்கு இமாச்சலப் பிரதேச அரசின் நிலை தான் சான்று ஆகும்.

2026 27ம் ஆண்டுக்கான இமாச்சலப் பிரதேச அரசின் நிதிநிலை அறிக்கையை அம்மாநில சட்டப்பேரவையில் முதல்வர் சுக்விந்தர் சிங் சுக்கு தாக்கல் செய்தார். வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கையின் மதிப்பு 6 % முதல் 8 % உயர்த்தப்படும் நிலையில், இமாச்சலப் பிரதேச அரசு நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி நிதிநிலை அறிக்கை மதிப்பை 6.12% குறைத்திருக்கிறது. கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை மதிப்பு ரூ.58,514 கோடியாக இருந்த நிலையில், நடப்பாண்டில் அது ரூ.54,928 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி, நிதி நெருக்கடி காரணமாக அடுத்த 6 மாதங்களுக்கு அம்மாநில முதல்வரின் ஊதியம் 50%, அமைச்சர்களின் ஊதியம் 30%, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 20% வீதம் குறைக்கப்படும்;



அதிகாரிகளில் தலைமைச் செயலாளர், செயலாளர்கள், காவல்துறை தலைமை இயக்குனர்கள் உள்ளிட்ட உயரதிகாரிகளின் ஊதியம் 30%, காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் அதற்கும் கீழ் நிலையில் உள்ள அதிகாரிகளின் ஊதியம் 20% குறைக்கப்படும்; அனைவருக்கும் வழங்கப்படும் 3% ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடைநிலை ஊழியர்களுக்கு மட்டும் ஊதியக் குறைப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. குறைக்கப்படும் ஊதியம் எப்போது மீண்டும் வழங்கப்படும் என்பது குறித்து அறிவிக்கப் படவில்லை. இமாச்சலப் பிரதேச அரசு ஊழியர்களுக்கு இது தாங்க முடியாத பேரிடியாக அமைந்திருக்கிறது. இமாச்சலப் பிரதேச அரசு கடந்த இரு ஆண்டுகளாகவே அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க நிதியில்லாமல் தடுமாறி வந்தது. பல மாதங்கள் மிகவும் தாமதமாகத் தான் ஊதியம் வழங்கப்பட்டது. இந்த நிலைக்குக் காரணம் அம்மாநில அரசின் மிக மோசமான நிதி மேலாண்மை தான். அரசின் வருமானத்தைப் பெருக்குவதற்கு ஆக்கப்பூர்வமாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத ஆட்சியாளர்கள், செலவை மட்டும் அதிகரித்ததன் விளைவு தான் இது.

இமாச்சலப் பிரதேச அரசின் நிதிநிலை எந்த அளவுக்கு மோசமாக இருக்கிறதோ, அதை விட மோசமான நிலையில் தான் தமிழ்நாட்டின் நிதிநிலை உள்ளது. இமாச்சலப் பிரதேச அரசின் மொத்தக் கடன் ரூ.1 லட்சம் கோடி. அம்மாநில அரசின் நிதிநிலை அறிக்கை மதிப்பு ரூ.58,514 கோடி. நிதிநிலை அறிக்கை மதிப்பை விட கடனின் அளவு 170 % அதிகம் ஆகும். ஆனால், அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட 2026 27ம் ஆண்டுக்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையின் மதிப்பு ரூ.4 லட்சத்து 52,833.35 கோடி. அதே நேரத்தில் தமிழக அரசின் நேரடிக்கடன் ரூ.10 லட்சத்து 71,770 கோடி. அதாவது தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை மதிப்பை விட கடனின் அளவு 237 % அதிகம் ஆகும். நிதி நிலை அறிக்கை மதிப்பை விட 170 % அளவுக்கு கடன் கொண்ட இமாச்சலப் பிரதேச அரசே 30 % வரை ஊதியத்தை குறைக்க வேண்டியிருக்கும் நிலையில், நிதி நிலை அறிக்கை மதிப்பை விட 237 % கூடுதல் கடன் வைத்திருக்கும் தமிழகத்தின் நிலை என்னவாகும் ? என்பதை யோசித்தால் தெளிவு பிறக்கும்.

திமுக அரசு தொடர்ந்து மூடி மறைத்து வரும் ஓர் உண்மை என்னவென்றால், அரசு ஊழியர்களுக்கான ஊதியத்தையே கடன் வாங்கித் தான் வழங்கி வருகிறது என்பதைத் தான். ஒரு மாநில அரசு அதன் வருவாய் வரவுகளுக்குள் வருவாய் செலவுகளை கட்டுபடுத்துவது தான் சிறந்த நிதி மேலாண்மை ஆகும். 2025 26ம் ஆண்டில் தமிழக அரசின் மொத்த வருவாய் வரவுகள் 3,09,698 கோடி ஆகும். இதில் மானியங்களுக்கு ரூ.1,59,486.87 கோடி, வட்டி செலுத்த ரூ.70,753.99 கோடி, பிற நிலையான செலவுகளுக்கு ரூ.16,921.78 கோடி என 2,47,162.64 கோடியை செலவு செய்தது போக அரசிடம் ரூ.62,535 கோடி மட்டும் தான் மீதமிருக்கும்.

ஆனால், அரசு ஊழியர்களுக்கு ஊதியமாக ரூ.90,463.98 கோடி, ஓய்வூதியமாக ரூ.41,290.40 கோடி என ரூ.1,31,754.38 கோடி வழங்கப்பட வேண்டும். அரசிடம் ரூ.62,535 கோடி மட்டுமே உள்ள நிலையில், மீதமுள்ள தொகையை கடன் வாங்கித் தான் திமுக அரசு வழங்கியது. அதனால் தான் கடந்த ஆண்டில் ரூ.69,219 கோடி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. திமுக ஆட்சியின் 5 ஆண்டுகளிலும் இது தான் நடந்திருக்கிறது. அதனால் தான் திமுக ஆட்சியில் தமிழகத்தின் நேரடிக் கடன் ரூ.9,52,374 கோடியாக அதிகரித்திருக்கிறது.

இந்த அவல நிலைக்கு காரணம் திமுக அரசின் மோசமான நிதி மேலாண்மை தான். திமுக அரசைப் பொறுத்த வரை ஊழல் செய்வதில் அலிபாபாவும் 40 திருடர்களைப் போலவும், நிர்வாகம் செய்வதில் பரமார்த்த குருவும் அவரது சீடர்களைப் போலவும் செயல்பட்டு வருகிறது. அதனால் தான் திமுக ஆட்சிக்கு வந்த பிறகு இந்தியாவிலேயே அதிக கடன் வாங்கும் மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. இதே நிலை நீடித்தால் அடுத்த சில ஆண்டுகளில் தமிழ்நாட்டிலும் அரசு ஊழியர்களின் மாத ஊதியத்தை 30 % முதல் 50 % வரை குறைக்க வேண்டியிருக்கும்.

இந்த நிலை மாற வேண்டும் என்றால், அரசின் வருவாயைப் பெருக்கி, தேவையற்ற செலவுகளை குறைக்க வேண்டும். நிர்வாகத் திறன் இல்லாத திமுக அரசால் அதை செய்ய முடியாது. இதை நன்கு உணர்ந்திருக்கும் தமிழ்நாட்டு மக்கள் வரும் தேர்தலில் திமுகவை வீட்டுக்கு அனுப்புவார்கள். அதன் பின்னர் அமையவுள்ள புதிய அரசில் தமிழ்நாட்டின் நிதி நிலையை மேம்படுத்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று அன்புமணி கூறியுள்ளார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

# கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் யானைகள் நடமாட்டம் சுற்றுலா பயணிகள் செல்ல தடை



கொடைக்கானல், மார்ச்.24-

கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் யானைகள் நடமாட்டம் இருப்பதால் திங்கட்கிழமை காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் பேரிஜம் ஏரி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ளது. இதனால் வனத்துறையினரிடம் அனுமதி பெற்றே சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியும். பேரிஜம் ஏரிக்கு செல்லும் வழியில் தொப்பி தூக்கிப் பாறை, மதிகெட்டான் சோலை, வியூ பாய்ண்ட், அமைதி பள்ளத்தாக்கு உள்ளிட்ட இடங்களை பார்க்கலாம்.

இந்நிலையில் நேற்று (மார்ச் 22) பிற்பகல் முதல் பேரிஜம் ஏரி பகுதியில் யானை நடமாட்டம் இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் அங்கு செல்வதற்கு திங்கட்கிழமை காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை வனத்துறை தடை விதித்துள்ளது. இது குறித்து வனத்துறையினர் கூறும் போது, யானை நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். யானை இடம் பெயர்ந்து வனப்பகுதிக்குள் சென்றதும் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படுவர்' என்றனர்

# டெக்சாஸில் இருந்து 47,000 டன் காஸ் இந்தியா வந்ததுரஷ்யாவில் இருந்து 7 கப்பல்களில் கச்சா எண்ணெய் வருகிறது



புதுடெல்லி, மார்ச். 24-

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து 47,000 டன் சமையல் காஸ் ஏற்றி வந்த கப்பல் நேற்று கர்நாடகாவின் மங்களூருக்கு வந்து சேர்ந்தது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போரால் இந்தியாவில் சமையல் காஸுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இது குறித்து ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியனுடன் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் பிறகு ஈரான் ராணுவத்தின் சிறப்பு அனுமதியுடன் ஷிவாலிக் கப்பல், நந்தா தேவி கப்பல், ஜக் லட்கி கப்பல்களில் கச்சா எண்ணெய் இந்தியா வந்தடைந்தன.

இதற்கிடையில் வளைகுடா நாடுகளின் கச்சா எண்ணெய், சமையல் காஸ் (எல்பிஜி) போக்குவரத்து முடங்கியதால் அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து 22 லட்சம் டன் எல்பிஜியை கொள்முதல் செய்ய இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் ஒப்பந்தங்களை மேற்கொண்டு உள்ளன.

இதன்படி அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து 47,000 டன் சமையல் காஸ் ஏற்றி வந்த பைக்ஸிஸ் பயோனீர் கப்பல் நேற்று கர்நாடகாவின் மங்களூரை வந்தடைந்தது. மங்களூருவில் கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி சேமிப்பு கிடங்குகள் உள்ளன.

அங்கிருந்து கர்நாடகா, தமிழகம், தெலங்கானா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களுக்கு பெட்ரோல், டீசல், எல்பிஜி காஸ் விநியோகம் செய்யப்படுகிறது.

மங்களூரு துறைமுகத்துக்கு அடுத்தடுத்து சமையல் காஸ் கப்பல்கள் வருவதால் தென் மாநிலங்களில் எல்பிஜி விநியோகம் அதிகரிக்கும் என்று பொதுத்துறை எண்ணெய் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் சீனாவுக்கு சென்று கொண்டிருந்த ரஷ்யாவின் 7 கச்சா எண்ணெய் கப்பல்கள் இந்தியாவுக்கு திருப்பி விடப்பட்டிருக்கின்றன. இதில் அகுவா டைட்டன் என்ற கப்பல் சுமார் ஒரு லட்சம் டன் கச்சா எண்ணெயுடன் நேற்று முன்தினம் மங்களூரு துறைமுகத்தை வந்தடைந்தது. ரஷ்யாவின் 6 கச்சா எண்ணெய் கப்பல்களும் அடுத்தடுத்து இந்திய துறைமுகங்களை வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



■ திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து கட்சி பிரமுகர்களின் கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்றது உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி மற்றும் அரசு அலுவலர்கள்



# காசநோய் இல்லாத தமிழகம் படைப்போம்!" இலஞ்சி பி.எட் கல்லூரியில் விழிப்புணர்வு

தென்காசி.மார்ச், 24-

தென்காசி மாவட்டம் இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் கல்வியியல் கல்லூரியில் தமிழ்நாடு சுகாதார துறையின் காசநோய் தடுப்பு பிரிவு சார்பில் உலக காசநோய் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் (பொறுப்பு) ஷீலா நவரோஸ் தலைமை வகித்தார். உதவி பேராசிரியர் ஜெனிபர் முன்னிலை வகித்தார். ஜெபா எபனேசர் வரவேற்றார். மாவட்ட சுகாதார கல்வியாளர் மாரிமுத்துசாமி, மூத்த சிகிச்சை மேற்பார்வையாளர் சரவணன் ஆகியோர் காசநோயின் அறிகுறிகள் அதன் சிகிச்சை முறைகள் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து விளக்கமளித்தனர்.

தொடர்ந்து மாணவ ஆசிரியர்கள் காச நோய் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர். நூலகர் ஏஞ்சலின் நன்றி கூறினார் அலுவலக பணியாளர்கள் பிரெட்ரிக், ஷேரோன், பேதுரு, லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஆத்தூரில் 150 அதிமுக, பாஜக, தவெக தொண்டர்கள் ஒரே நேரத்தில் அமைச்சர் ஐ.பி. முன்னிலையில் திமுகவில் ஐக்கியம்



சின்னாளபட்டி, மார்ச். 24-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த மாற்றுக் கட்சியினர் குறிப்பாக அதிமுக இளைஞர் இளம்பெண்கள் பாசறையை சேர்ந்தவர்கள் மற்றும் த.வெ.க. பி.ஜே.பி கட்சியைச் சேர்தவர்கள் திமுகவில் அதிக அளவில் இணைந்து வருகின்றனர். ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், கரிசல்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கரிசல்பட்டி, பழைய கன்னிவாடி, காரமடை, ஆதிதிராவிடர் நகரைச் சேர்ந்த அதிமுக, பி.ஜே.பி. த.வெ.க. கட்சி தொண்டர்கள் 150 பேர் ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலளார் எம்.இன்பராஜ், திமுக நிர்வாகி பசும்பொன், கரிசல்பட்டி ஜோசப் ஆசான் தலைமையில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை அணிவித்து திமுகவில் இணைந்தனர்.

திமுகவில் இணைந்தவர்களுக்கு கட்சியின் சின்னம் பொறித்து ஆடை அணிவித்து வாழ்த்திப் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, பல கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள், நிர்வாகிகள் கட்சியில் இணைகிறார்கள் என்றார் அதற்கு ஒரே காரணம் முத்தமிழ் அறிஞர் வழியில் வந்த திராவிடமாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்புமிகு திட்டங்களும், செயல்பாடுகளும்தான் காரணம் என்றார். குறிப்;பாக ஆத்தூர் தொகுதியில் வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, கலைஞரின் கனவு இல்லம், சாலை வசதி, வீடு தோறும் குடிதண்ணீர் இணைப்புகள், ஏழை எளிய மாணவர்களுக்காக கல்லூரிகள் உட்பட பல்வேறு சாதனை திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்ததால், மாற்றுக் கட்சியினர் அதிக அளவில் இணைந்து வருகின்றனர். அவர்கள் எல்லோரும் தாய் கழகமான திமுகவிலிருந்து பிரிந்து சென்றவர்கள்தான். இன்று தாய் கழகத்திற்கு வந்துள்ளனர். உங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பேன், இது உறுதி என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர் நாகராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், தண்டபாணி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், பிள்ளையார்நத்தம் முருகேசன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், ரெட்டியார்சத்திரம் மேற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் மாங்கரை திரு ப்பதி, மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, ரெட்டியார்சத்திரம் ஒன்றிய சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் சூசைராஜ், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால் (எ) மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் ஜஸ்டீன்மிக்கேல்லம்மாள், சுமதி கணேசன், காளீஸ்வரி மலைச்சாமி, கரிசல்பட்டி கிளைச் செயலாளர்கள் டீக்கடை ஜஸ்டீன், ஆரோக்கியம், மாவட்ட பிரதிநிதி பிச்சைமுத்து, தொழிலாளர் அணி அமைப்பாளர் சாந்தகுமார். இளைஞரணி அமைப்பாளர் மோவின், தெற்கு ஒன்றிய ஐ.டி.விங் செயலாளர் விஜய் பிரபு உட்பட திமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.



■ புதுச்சேரி காங்கிரஸ் தலைவர் வைத்தியலிங்கம் வீட்டை முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி ஆதரவாளர்கள் முற்றுகையிட்டதால், போலீஸ்காரர் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. வருகின்ற சட்டமன்ற தேர்தலில் நெல்லித்தோப்பு தொகுதி போட்டியிட வாய்ப்பு தராததால், மாலை 3 மூன்று மணி அளவில் வேட்பு மனு நேரம் முடிவடைகிற நிலையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.



■ தமிழ்நாடு அரசின் காவல்துறை தலைமை இயக்குனர் (பொறுப்பு) ஜி. வெங்கடராமன், ஐ.பி.எஸ்., சென்னையில் உள்ள லோக் பவனில், தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கரைச் சந்தித்தார்.

# தமிழகத்தில் 'துரந்தர் 2' திரையிடுவதை நிறுத்தக் கோரி ஐகோர்ட்டில் அவசர முறையீடு

சென்னை, மார்ச். 24-

'துரந்தர் 2' திரைப்படத்தின் காட்சிகளை தமிழ்நாட்டில் திரையிடுவதை நிறுத்தக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அவசர முறையீடு செய்யப்பட்டது.

பாலிவுட் சினிமாவின் முன்னணி ஹீரோவான ரன்வீர் சிங் நடிப்பில் பிரம்மாண்டமான பொருட்செலவில் உருவான திரைப்படம் 'துரந்தர் 2'. திரையரங்குகளில் கடந்த 19 ஆம் தேதி வெளியாகி திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் தமிழக திரையரங்குகளில் இத்திரைப்படத்தின் காட்சிகளை வெளியிட தடை கோரி சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருள்முருகன் அமர்வில் வழக்கறிஞர் ஷிலா என்பவர் அவசர முறையீடு செய்தார்.

தேர்தல் நடத்தை விதிகள் கடந்த மார்ச் 15 ஆம் தேதி முதல் அமலில் உள்ள நிலையில் இப்படத்தில் அரசியல் தொடர்பாகவும், ஒரு கட்சி சார்பான கருத்துகள் அதிகம் வலியுறுத்தப்படுவதாலும் 'துரந்தர் 2' திரைப்படத்தை தமிழக திரையரங்குகளில் தற்போதைய நிலையில் வெளியிட தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தார்.

தேர்தலுக்கு பின் 'துரந்தர் 2' திரைப்படத்தை தமிழகத்தில் வெளியிட அனுமதிக்கலாம் எனவும் தெரிவித்தார். இந்த முறையீட்டை கேட்ட தலைமை நீதிபதி அமர்வு, திரைப்படம் வெளியாகி விட்டது, மனுவாக தாக்கல் செய்து விட்டு முறையீடு செய்யும்படி அறிவுறுத்தினர்.



■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 ஐ முன்னிட்டு, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், தென்காசி மாவட்டத்திற்கென நியமிக்கப்பட்ட தேர்தல் பார்வையாளர்கள் நீரஜ்குமார், இ.ஆ.ப., (கடையநல்லூர், தென்காசி), கிருஷ்ண குமார் சிங்.இ.ஆ.ப., (சங்கரன்கோயில், வாசுதேவநல்லூர்), ஈஷாபிரியா, இ.ஆ.ப., மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர்.இ.ஆ.ப ஆகியோர் மின்னணு முறையில்( Randomization) ஒதுக்கீடு செய்யும் பணியினை துவக்கி வைத்தார்கள்.

# மறைந்த நீதியரசர் தமிழ்வாணன் புகழ் நீதித்துறை வரலாற்றில் நிலைத்திருக்கும் வைகோ இரங்கல்



சென்னை, மார்ச். 24-

நிலைகுலையாத நேர்மையாளரான நீதியரசர் தமிழ்வாணன் புகழ் நீதித்துறை வரலாற்றில் நிலைத்திருக்கும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை உயர்நீதிமன்றத்தின் புகழ்மிக்க நீதியரசராக இருந்து ஓய்வு பெற்ற நீதியரசர் தமிழ்வாணன் மார்ச் 22ம் தேதி உடல்நலக் குறைவால் மறைந்தார் என்ற செய்தியை இன்றைய காலை ஏடுகள் மூலமாக அறிந்தேன். உடனே அவருடைய இல்லத்திற்குச் சென்று அவரது திருஉருவப் படத்திற்கு மாலை சூட்டி, மலர்களைத் தூவி விட்டு, அவரது துணைவியாரிடமும், அன்னாரது குடும்பத்தினரிடமும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவித்தேன்.

தேனி மாவட்டம், அம்பரப்பர் மலையில் இந்திய மத்திய அரசு நிறுவ திட்டமிட்டிருந்த தலைமை அமைச்சர் மோடி தனது கனவுத் திட்டம் என்று அறிவித்த நியூட்ரினோ அணு நச்சாலையை அங்கு நிர்மானிக்கக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தற்போது நினைவில் வாழும் நீதியரசர் தமிழ்வாணன் அவர்கள் அமர்வில் மூன்று மணி நேரம் ஆணித்தரமான ஆதாரங்களோடு என் வாதங்களை முன் வைத்தேன். நீதியரசர் தமிழ்வாணன் அவர்கள் நியூட்ரினோ திட்டத்திற்கு 2015ம் ஆண்டு மார்ச் 28ம் நாள் தடை ஆணை விதித்தார். அந்தத் தடை ஆணை இன்று வரை நிலுவையில் நீடிக்கிறது.

இந்த நியூட்ரினோ அபாயத்தை எதிர்த்துத்தான் மதுரையில் இருந்து தேனி மாவட்டத்தின் பல்வேறு கிராமங்கள் வழியாக நடைபயணமாகச் சென்று கம்பத்தில் நிறைவு செய்தேன். நடைபயணத்தை இன்றைய முதல்வர் ஸ்டாலின்தான் புலி, கயல், வில் இலச்சினை பொறித்த உரிமைக் கொடியை என் கரங்களில் தந்து தொடங்கி வைத்தார்.

நினைவில் வாழும் நீதியரசர் தமிழ்வாணனின் பெற்றோர் திராவிடர் கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். தந்தை பெரியாரின் மீது எல்லையற்ற மரியாதை கொண்டு, பெரியார் நெறிப்படி வாழ்ந்தார். நிலைகுலையாத நேர்மையாளரான நீதியரசர் தமிழ்வாணன் புகழ் நீதித்துறை வரலாற்றில் நிலைத்திருக்கும்" என்று வைகோ கூறியுள்ளார்.

சக்கர வியூகம்

24.03.2026 செவ்வாய்கிழமை

# "அன்பும் பாதுகாப்பும் உறுதி!" புதிய நிர்வாகிகளுக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி கொடுத்த 'வெயிட்டான' வாக்குறுதி



சின்னாளபட்டி மார்ச். 24-

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி பூதிபுரம், அணைப்பட்டி, அழகுசமுத்திரபட்டி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த கூட்டமைப்பின் நிர்வாகிகள், மாநில இளைஞரணி தலைவர் ஈஸ்வரபாண்டியன் தலைமையில் திரண்டனர். இவர்கள் அனைவரும் திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், அமைச்சருமான மாண்புமிகு ஐ.பெரியசாமி முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்துக் கொண்டனர்.

புதிய நிர்வாகிகளை வாழ்த்தி, திமுக சின்னம் பொறித்த ஆடையை அணிவித்து அமைச்சர் பேசியதாவது: "மறைந்த அண்ணன் பசுபதிபாண்டியன், தனது தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகள் மீது எவ்வளவு அன்பும் பாசமும் வைத்திருந்தார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதே அன்பும், பாதுகாப்பும் கழகத்தில் உங்களுக்கு எப்போதும் கிடைக்கும். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என்னைச் சந்தித்து உங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம். உங்களுக்குப் பிரகாசமான எதிர்காலம் காத்திருக்கிறது, தொடர்ந்து மக்கள் பணியாற்றுங்கள் என்று அமைச்சர் பேசினார்.

விழாவிற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, பொருளாளர் சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுரேஷ்குமார், துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணன், ஹரிராம், செல்வவிநாயகம், மாவட்ட வர்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திமுக தகவல் தொழில்நுட்பஅணி துணை ஒருங்கிணைப்பாளர் வாஞ்சிநாதன், கணேசன், மற்றும் திமுக வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# முறைகேடு செய்தால் தப்ப முடியாது! தேர்தல் விதிமீறல்களைத் தட்டிகேட்க வழக்கறிஞர்கள் படை



சின்னாளபட்டி, மார்ச். 24-

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக சார்பாக 2026 சட்டமன்ற தேர்தலுக்கான வழக்கறிஞர்களுக்கான வார்ரூம் திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, பொருளாளர் சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு, வார்ரூமை திறந்து வைத்தார். அதன் பின்னர் வழக்கறிஞர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில் 2026 சட்டமன்ற தேர்தலில் மாற்றுக் கட்சியினர் முறைகேடுகள் செய்தால், அது சம்மந்தமான புகார்களை உடனுக்குடன் தேர்தல் ஆணையத்திற்கும், திமுக தலைமை கழகத்திற்கும் உடனுக்குடன் தெரியப்படுத்த வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுரேஷ்குமார், துணை அமைப்பாளர்கள் கிருஷ்ணன், ஹரிராம், செல்வவிநாயகம், மாவட்ட வர்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திமுக தகவல் தொழில்நுட்பஅணி துணை ஒருங்கிணைப்பாளர் வாஞ்சிநாதன், கணேசன், மற்றும் திமுக வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# வானில் கருடன் தரிசனம் ஸ்ரீதேவி பூதேவி சமேத பெருமாள் கோவில் குடமுழுக்கு விழா

அலங்காநல்லூர் மார்ச். 24-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கேட்டுகடை கம்மாளப்பட்டி கிராமத்தில், இந்து சமய அறநிலையத்துறைக்கு உட்பட்ட ஸ்ரீதேவி ஸ்ரீ பூதேவி சமேத பெருமாள் திருக்கோவில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம் மற்றும் பூர்ணாஹூதி பூஜைகள் மங்கல இசை முழங்க நடைபெற்றன.

ராமேஸ்வரம், அழகர்கோவில், காசி, கங்கை உள்ளிட்ட புண்ணிய தீர்த்தங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் அடங்கிய கலசங்கள், மேளதாளங்கள் முழங்க யாகசாலையை வலம் வந்தன. பின்னர், கோவில் கருவறையில் அமைந்துள்ள சுவாமிகளுக்கு வேத மந்திரங்கள் முழங்க, வானத்தில் கருடன் வட்டமிட, கோபுரக் கலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் கோலாகலமாக நடைபெற்றது.பக்தர்கள் வருகை:

இந்த ஆன்மீக நிகழ்வில் திருவேங்கடம் மற்றும் ராமச்சந்திர பட்டாச்சாரியார்கள் குழுவினர் பூஜைகளை முன்னின்று நடத்தினர். கும்பாபிஷேகத்தைக் காண அலங்காநல்லூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்குப் பூஜை பொருட்களும், அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது.

விழாவிற்கான ஏற்பாடுகளைத் திருக்கோவில் அறங்காவலர், இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் மற்றும் அலங்காநல்லூர் கிராம பொதுமக்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.



■ புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்கான மனு தாக்கல் நிறைவடைந்தது. 1 மணி வரை 205 பேர் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர். திமுக காங்கிரஸ் சார்பாக 30 தொகுதிகளிலும் வேட்பாளர்கள் வேப்பு மனு அளித்துள்ளனர். புதுச்சேரி மாநில காங்கிரஸ் தலைவர் வைத்தியலிங்கம் எம்.பி தட்டாஞ்சாவடி தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார். பாஜக மாநில தலைவர் ராமலிங்கம், ராஜ்பவன் தொகுதியில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தார். லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் காமராஜர் நகர் மற்றும் நெல்லித்தோப்பு ஆகிய தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

# வானிலை முன்னறிவிப்பு கோவை, நீலகிரியில் மழைக்கு வாய்ப்பு

சென்னை, மார்ச்.24-

தமிழகத்தில் கோவை, நீலகிரி மாவட்டங்களில் (மார்ச் 24) மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மன்னார் வளைகுடா முதல் மேற்கு விதர்பா வரை ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (மார்ச் 24) கோவை, நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். 25, 26 தேதிகளில் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

27ம் தேதி கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களிலும், 28, 29 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இதர மாவட்டங்களில் ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகத்தில் நாளை முதல் 25ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலும், 26, 27 தேதிகளில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 95 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 77 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது



# தங்கம், பணத்தை வாரி வழங்கும் இந்திய மக்களின் உதவிக்கு ஈரான் தூதர் நெகிழ்ச்சி

புதுடெல்லி, மார்ச். 24-

ஈரான் நாட்டின் இக்கட்டான சூழலில் அங்குள்ள மக்களுக்கு உதவும் வகையில் காஷ்மீர் மக்கள் தங்களது நகை மற்றும் சேமிப்பு பணத்தை தானமாக வழங்கி மனிதாபிமானத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.போரால் பாதிக்கப்பட்ட ஈரான் மக்களுக்கு உதவும் வகையில் காஷ்மீரின் புத்காம் பகுதியில் உள்ள இமாம் ஜமான் மசூதியில் சிறப்பு நிதி திரட்டும் மையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள தாய்மார்களும், சகோதரிகளும் தங்களது நகைகள், செம்பு பாத்திரங்கள் மற்றும் பணத்தை வாரி வழங்கி வருகின்றனர்.

சிறுவர்கள் கூட தங்களது உண்டியல் சேமிப்பை ஈரானுக்காக கொடுத்து நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர். இந்திய மக்களின் இந்த செயலுக்கு இந்தியாவுக்கான ஈரான் தூதரகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது. இது குறித்து ஈரானிய தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில், 'உங்கள் அன்பு மற்றும் மனிதாபிமானத்தை ஒருபோதும் மறக்க மாட்டோம். ஈரான் மக்களுடன் தோளோடு தோள் நின்று மனிதாபிமான ஆதரவையும் மனப்பூர்வமான ஒற்றுமையையும் வெளிப்படுத்திய காஷ்மீர் மக்களுக்கு எங்களது இதயப்பூர்வமான நன்றிகள்.

உங்களின் கண்ணீரும் தூய்மையான உணர்வுகளும் எங்களுக்கு மிகப்பெரிய ஆறுதலாகும். நன்றி இந்தியா' என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளது. சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பு உயிரிழந்த தனது கணவரின் நினைவாக வைத்திருந்த தங்க நகையை, ஈரானிய மக்களின் துயர் துடைக்க காஷ்மீரைச் சேர்ந்த ஒரு பெண்மணி தானமாக வழங்கியுள்ளார். இதேபோல், வளைகுடா போர் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடி காலங்களிலும் புத்காம் பகுதி மக்கள் தங்கம், வெள்ளி மற்றும் ரொக்கப் பணத்தை ஈரானுக்கு ஆதரவாக வழங்கி தங்களது ஒற்றுமையை வெளிப்படுத்திய பழைய சம்பவங்கள் நெகிழ்ச்சியை ஏற்படுத்தின



# பெரியஊர்சேரி ஜிம்மா பள்ளிவாசலில் எஸ்டிபிஐ கட்சியினர் பங்கேற்ற ரம்ஜான் தொழுகை

மதுரை, மார்ச். 24-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில் அமைந்துள்ள ஜிம்மா பள்ளிவாசலில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு இஸ்லாமிய பெருமக்கள் கலந்து கொண்ட தொழுகை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவிற்கு எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லைமுபாரக், மாவட்டத் தலைவர் பிலாலுதீன் ஆலோசனையின் பேரில் சோழவந்தான் தொகுதி தலைவர் அப்துல்ரகுமான், இணைச் செயலாளர்சையதுஒலி,

அலங்கை ஒன்றிய தலைவர் பாகர்உசேன்,மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள் இஸ்லாமிய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக வேட்பாளர் நேர்காணல் நிறைவு

சென்னை, மார்ச். 24-

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக வேட்பாளர் நேர்காணல் இன்றுடன் நிறைவடைகிறது. திமுகவில் போட்டியிட விருப்பமனு அளித்தவர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேர்காணல் செய்கிறார். இறுதி நாளான இன்று 6 மாவட்டங்களுக்கு உட்பட்ட 700 பேரிடம் நேர்காணல் நடைபெற்றுவருகிறது. புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு நேர்காணல் நடைபெறுகிறது

# திராவிட வேரை அசைக்க முடியாது! மிரட்டல்களுக்குப் பணியாமல் மு.க.ஸ்டாலினை ஆதரிப்பேன் ஓ.பன்னீர்செல்வம் உறுதி



அலங்காநல்லூர் மார்ச். 24-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் அலங்காநல்லூர் கேட்டுக்கடை தனியார் திருமண மண்டபத்தில் அமைச்சர் பி.மூர்த்தி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் முன்னிலை நடைபெற்றது.

*ஓ.பி.எஸ்ஸின் அனல் பறக்கும் பேச்சு:*

சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்ட முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது: "மத்திய ஒன்றிய அரசு தமிழகத்தை வஞ்சிப்பதோடு நிதி வழங்காமல் முட்டுக்கட்டை போடுகிறது. அவர்களுடன் கூட்டணி வைத்துள்ள எடப்பாடி பழனிசாமி ஏற்கனவே 10 தோல்விகளைக் கண்டுவிட்டார். வரவிருக்கும் தேர்தலில் அவருக்கு 11வது தோல்வி காத்திருக்கிறது. நன்றி மறந்த இவரைப் போன்றவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். அதிமுகவை தனது தாத்தன் வீட்டு சொத்து போல அபகரித்துக் கொண்டவரின் அழிவு, அவருடன் இருப்பவர்களாலேயே ஏற்படும்.

தமிழகத்தில் திராவிடம் என்பது ஆழமான வேரூன்றிய மரம், அதை யாராலும் அசைக்க முடியாது. ஒன்றிய அரசின் மிரட்டல்களுக்கு நான் பணிய மாட்டேன். 234 தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னம் வெற்றி பெற நானும் எனது ஆதரவாளர்களும் தளபதி மு.க.ஸ்டாலின்க்கு எப்போதும் உறுதுணையாக இருப்போம்."

இதில் ம தேனி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரநாத், மதுரைமுன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், உசிலை சட்டமன்ற உறுப்பினர் அய்யப்பன்,திமுக மாவட்ட அமைத்த தலைவர் பாலசுப்ரமணியன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், பரந்தாமன், முத்தையன், அருண், பேரூராட்சி தலைவர்கள் ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், பால்பாண்டி, ஜெயராம், முன்னாள் பேரூராட்சி தலைவர் அழகுஉமா, பெரியசாமி, ஒன்றிய துணைச் துணை செயலாளர் வாவிடமருதூர் கார்த்திகேயன், ஒன்றிய பொருளாளர் சுந்தர்ராஜன், ஒன்றிய அணி அமைப்பாளர்கள் சந்தனகருப்பு, தவசதீஷ், சின்ன ஊர்சேரி ஆனந்த்,ஜெயராமன், உட்பட கூட்டணி கட்சியான தனியரசு பேரவை மாவட்டத் தலைவர்பார்த்திபன், மாவட்டச் செயலாளர் அய்யூர்தயாளன், ஒன்றிய செயலாளர் நல்லையன், மக்கள் நீதி மய்யம் சோழவந்தான் மாவட்ட செயலாளர் மெடிக்கல் ரமேஷ், மாவட்டத் துணைச் செயலாளர் விமல்ராஜ், ஒன்றிய செயலாளர் ரவி, மதிமுக மாவட்ட செயலாளர் மார்நாடு, ஒன்றிய செயலாளர் பாஸ்கரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் குமரேசன்,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒத்தக்கடை இளங்கோவன்,

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் தமிழாளன்,ஒன்றிய செயலாளர் பாலமுருகன், எஸ்டிபிஐகட்சியின் சோழவந்தான்தொகுதி தலைவர் அப்துல்ரகுமான், வாடிப்பட்டி ஒன்றிய செயலாளர் அப்துல்காதர், மகளிரணிதொகுதி தலைவிபாத்திமா, மூவேந்தர் முன்னணி கழகத்தின் ஒன்றிய நிர்வாகி முடுவார்பட்டி ஜெயவீரன், ஆதிதமிழர் பேரவை மாவட்ட செயலாளர் சரவணன்,தமிழ்புலிகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் சிங்கபாண்டி, உட்பட திமுக மகளிரணியினர் தொண்டரணியினர் பலர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆட்சித் தலைவர் சரவணன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள் உடன் அரசு அதிகாரிகள் மற்றும் கட்சி பிரமுகர்கள்.



■ மதுரை மாவட்டம் திருவிழான்பட்டி, அழகர்கோவில்மெயின்ரோடு, பத்திர ஆபீஸ் அலுவலகம் அருகில் உலக தண்ணீர் தினத்தை முன்னிட்டு AIM அவர்னஸ் இந்தியா மூமெண்ட்ஸ் சோசியல் சர்வீஸ் யூத் ஆர்கனைசேஷன் மதுரை சார்பாக மரக்கன்று நடுதல் மற்றும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கும் விழா நடைபெற்றது. தலைவர் S.பாலா, கௌரவ தலைவர் P. மயில்வாகனன் மற்றும் கிவீனீ உறுப்பினர்கள் கலந்துகொண்டு மரக்கன்றுகளை பொது மக்களுக்கு வழங்கினார்கள்.



## உடுமலை கத்திவாலி ஸ்ரீ சபரி ஐயப்பன் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம்

திருப்பூர், மார்ச். 24-

திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம் கணக்கம்பாளையம் ஊராட்சி அலுவலகம் அருகே அமைந்துள்ள அருள்மிகு கத்திவாலி ஸ்ரீ சபரி ஐயப்பன் திருக்கோவில் மற்றும் கன்னிமூல கணபதி சன்னதி மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு, கணபதி ஹோமத்துடன் துவார பூஜை மற்றும் யாகசாலை பூஜைகள் மிகச் சிறப்பாகத் தொடங்கின. இதில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

வரும் 25.03.2026 (புதன்கிழமை) அன்று காலை 9.30 மணி முதல் 10.30 மணிக்குள் நடைபெற உள்ளது. அன்று காலை விசேஷ யாக கால பூஜைகள் நடைபெற்று, புனித நீர் அடங்கிய கலசங்கள் புறப்பட்டுத் திருக்கோவில் கோபுரக் கலசங்களுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக விழாவையொட்டி அன்று இரவு வள்ளி கும்மியாட்டம் மற்றும் பக்திப் பாடல் கச்சேரி உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை உடுமலை சபரி ஐயப்பன் திருக்கோவில் நிர்வாகிகள் மற்றும் விழா கமிட்டியினர் சிறப்பாகச் செய்து வருகின்றனர். ஐயப்ப பக்தர்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு ஐயப்பன் அருளைப் பெறுமாறு நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



## மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் வெண்ணைத்தாழி திருவிழா திரளான பக்தர்கள் வழிபாடு

திருவாரூர், மார்ச்.24-

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் பங்குனி பெருவிழாவின் முக்கிய திருவிழாவான வெண்ணைத்தாழி உற்சவம் விமரிசையாக நடைபெற்றது.

கடந்த மார்ச் 8 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய பங்குனி பெருவிழாவின் ஒவ்வொரு நாள் இரவும், பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதி உலா நிகழ்ச்சிகள் நடைபெற்ற நிலையில், நேற்று இரவு கோரதத்தில் சுவாமி வீதி உலா நடைபெற்றது. தொடர்ந்து இன்று காலை 7.30 மணி அளவில் வெள்ளி குடத்தில் வெண்ணெய் திருடும் கண்ணன் அலங்காரத்தில் எழுந்தருளி ராஜகோபால சுவாமி வீதியுலா வந்த போது, பக்தர்கள் சுவாமி மீது வெண்ணை வீசி வழிபட்டனர்.

தொடர்ந்து ராஜகோபால சுவாமி கோயிலின் நான்கு வீதிகளையும் சுற்றி வந்து, பந்தலடி வழியாக வெண்ணைத்தாழி மண்டபத்தை வந்தடைந்தது. இந்த திருவிழாவில் மன்னார்குடி மட்டுமின்றி, பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த பக்தர்களும் மன்னார்குடி சுற்றுப்புற கிராம மக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று ராஜகோபாலசுவாமி மீது வெண்ணை வீசி வழிபட்டனர். இன்று இரவு வெட்டும் குதிரை திருவிழா நடைபெறுகிறது. நாளை தேரோட்ட விழா நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.



## சிவில் சர்வீஸில் முத்திரை பதித்த புளியங்குடி இளைஞர்

### நேரில் வாழ்த்திய முன்னாள் நகர்மன்றத் தலைவர்

புளியங்குடி மார்ச். 24-

புளியங்குடி அருகே உள்ள சிந்தாமணி பகுதியைச் சேர்ந்த முனீஸ்வரன் என்பவரது மகன் முத்துக்குமார். எளிய கிராமப்புறப் பின்னணியில் இருந்து வளர்ந்த இவர், தனது விடாமுயற்சியால் முதல் முயற்சியிலேயே அகில இந்திய அளவில் முத்திரை பதித்துள்ளார். சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்ற இவருக்குப் பல்வேறு தரப்பினரும் தங்களது வாழ்த்துகளைக் குவித்து வருகின்றனர்.

வெற்றிச் செய்தியைத் தொடர்ந்து, முத்துக்குமாரின் இல்லத்திற்குப் புளியங்குடி முன்னாள் நகர்மன்றத் தலைவர் வெங்கட்ராமன்சாமி தலைமையில் முக்கியப் பிரமுகர்கள் நேரில் சென்றனர். சாதனை படைத்த மாணவர் முத்துக்குமாருக்குப் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஸ்ரீ முப்புடாதி அம்மன் கோவில் திருவிழா கமிட்டியாளர்கள், நிர்வாகிகள் மற்றும் ஊர் இளைஞர்கள் இனிப்புகள் வழங்கி, பட்டாசு வெடித்துத் தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது பேசிய முத்துக்குமார், தனது கடின உழைப்பு மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும் என்ற தனது எதிர்காலத் திட்டங்கள் குறித்துப் பகிர்ந்து கொண்டார். புளியங்குடி பகுதிக்கு உலக அளவில் பெருமை சேர்த்த இந்த மாணவரின் சாதனை, அப்பகுதி இளைஞர்களிடையே பெரும் ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



## நிதி தர மறுத்த மத்திய அரசு.. வழிநடத்திய முதல்வர்!

### காங்கிரஸ் தேர்தல் அறிக்கை குழு உறுப்பினர் கண்ணனின் பேட்டி

திருப்பூர் மார்ச். 24-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, திருப்பூர் மாநகர் மாவட்ட காங்கிரஸ் அலுவலகமான 'ராஜீவ் பவன்' வளாகத்தில் தேர்தல் அறிக்கை குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாநகர் மாவட்டத் தலைவர் கோபால்சாமி தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினரும், தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு உறுப்பினருமான கண்ணன் கலந்துகொண்டார். திருப்பூர் வடக்கு மாவட்டத் தலைவர் செல்வகுமார், தெற்கு மாவட்டத் தலைவர் கிட்டுசாமி மற்றும் முக்கிய நிர்வாகிகள் முன்னிலையில் பொதுமக்களிடமிருந்தும் கட்சியினரிடமிருந்தும் கருத்துக்கள் கேட்கப்பட்டன.

செய்தியாளர் சந்திப்பில் கண்ணன் பேசியதாவது: "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு அளித்த 500 வாக்குறுதிகளில், கடந்த 5 ஆண்டுகளில் 400க்கும் மேற்பட்டவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளார். மத்திய அரசு தமிழகத்திற்கு உரிய நிதி ஆதரவை வழங்காமல் பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்த போதிலும், முதல்வர் தனது சிறப்பான நிர்வாகத் திறமையால் மக்கள் நல ஆட்சியை வழங்கியுள்ளார்."

இலவசத் திட்டங்கள் குறித்த விமர்சனங்களுக்குப் பதிலளித்த அவர், "வசதி படைத்தவர்களுக்கு இவை இலவசங்களாகத் தெரியலாம், ஆனால் அடித்தட்டு மக்கள் முன்னேறுவதற்கு இவைதான் ஏணியாக உள்ளன. எனவே, அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தேர்தல் அறிக்கையைத் தயாரித்து காங்கிரஸ் தலைமைக்கு அனுப்ப உள்ளோம்," எனத் தெரிவித்தார்.

## மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் வசந்தம் வீசத் துணையாக நின்ற தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு

கோவை மார்ச். 24-,

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு (TVSK) சார்பில், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியலை மேம்படுத்தும் உன்னத நோக்கில், இலவச சுயவரம் மற்றும் திருமண விழா கோவை ராம் நகரில் அசோக் பிரேமா திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கு TVSK நிறுவனத் தலைவர் கராத்தே ஞிகூஷீ. மி.கண்ணன் தலைமை தாங்கினார்.




விழாவின் சிகர நிகழ்ச்சியாக, தஞ்சாவூரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஜோடி ஒன்றிற்கு இலவசத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. மணம் முடித்த தம்பதியினர் புதிய வாழ்க்கையைத் தொடங்க ஏதுவாக, ஒரு லட்ச ரூபாய் மதிப்பிலான வீட்டு உபயோகச் சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த விழாவில் பன்னீர் செல்வி நாயக் அம்மா, டாக்டர் கார்த்திகேயன், பிரவீன் குமார், திரு. சொக்கலிங்கம், ஹரி லிங்கம் கிதியோன், விஸ்வநாதன், திருச்சி Dr. G.பாலசுப்பிரமணியன் (TVSK திருச்சி மாவட்டச் செயலாளர் - தமிழ் பிரஸ் கிளப் மாநில எக்ஸிக்யூட்டி கமிட்டி மெம்பர்) சமூகத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

ஸ்ரீ கோமதி அம்பாள் டிராவல்ஸ்



ஏர் புஷ்பேக் சொகுசு பேருந்து வாடகைக்கு கிடைக்கும்
சங்கரன்கோவில்
ஆறுமுகம் - 98657 64957

கேரளா பர்னிச்சர்




ரயில்வே பீட்டர் ரோடு, சங்கரன்கோவில் 627756
9895544685 / 7092779356

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER



ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.



Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

SPARES 2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

SRI GANAPATHY ELECTRICALS
HARDARE & PIPES
#156, Jayakumar Lane, Omalur Road, Five Road, Salem - 636 004
All Types of Electricals & Hardware Pipes Avail Here



98842 99777 91591 58769

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000